I **<u>n the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

O.S 571/2021

**பி.வா.சா1 வீரபாண்டியன்**

| | |
|---|---|
| Name | : **வீரபாண்டியன்** |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 27.03.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் 1ம்பிரதிவாதி. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. 21.11.2016ம் தேதியில் மேலகரம் பேரூராட்சி மன்றத்திற்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பி.வா.சா.ஆ 7

2. 21.11.2016ம் தேதியிட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் பி.வா.சா.ஆ 8

3. 25.11.2016ம் தேதி தகவல் அறியும் உரிமைசட்டத்தின் கீழ் நான் அனுப்பிய மனு கை நகல் பி.வா.சா.ஆ 9

4. த.அ.உ.ச எண்.14/2016 நாள் 29.11.2016 அனுப்பிய பதில் அசல் பி.வா.சா.ஆ 10

5. 1.12.2016ம் தேதி தகவல் அறியும் உரிமைசட்டத்தின் கீழ் நான் அனுப்பிய மனு நகல் பி.வா.சா.ஆ 11

6. 1.12.16ம் தேதியிட்ட நான் அனுப்பிய மனுவிற்கு பொது தகவல் அலுவலர் ந.க.எண்.57/16 நாள் 29.11.16, 30.11.16 மற்றும் வாதி மனு அடங்கிய பதில் தகவல் அசல் பி.வா.சா.ஆ 12

7. ந.க.எண்.57/16ன்படி மேலகரம் பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் எனக்கு அனுப்பப் பெற்ற நகல் அசல் பி.வா.சா.ஆ 13

8. 8.12.2016ம் தேதி தென்காசி 2நிர் இணை சார்பதிவாளர் என் சார்பாக அனுப்ப பெற்ற வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்பி.வா.சா.ஆ 14

9. 8.12.2016ம் தேதியிட்ட ஒப்புகை அட்டைகள் எண்ணம் 3 அசல்பி.வா.சா.ஆ 15 வரிசைகள்

10. 5.12.2016 ம் தேதி திருநெல்வேலி மாவட்ட நில அளவை அலுவலகம், பொது தகவல அலுவலருக்கு நான் அனுப்பிய மனு நகல் பி.வா.சா.ஆ 16

11. பொது தகவல் அலுவலர் அனுப்பிய பதில் அசல் பி.வா.சா.ஆ 17

12. தென்காசி வட்டாட்சியர் அலுவலகப் பொது தகவல் அலுவலருக்கு நான் 12.12.2016 ம் தேதிய அனுப்பிய மனுகைநகல் பி.வா.சா.ஆ 18

13. தென்காரசி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் எனக்கு 29.1.2017 ம் தேதிய அனுப்பியபதில் அசல் பி.வா.சா.ஆ 19

14. 31.1.2017 ம் தேதி தென்காசி மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பி.வா.சா.ஆ 20

15. 30.01.2017 ம் தேதியிட்ட ஒப்புகை அட்டை அசல் பி.வா.சா.ஆ 21

16. மேலகரம், பேரூாட்சி மன்ற செயல் அலுவலர் ந.க.எண். 57/2016, நாள் 6.3.2017 பிரகாரம் வாதி கட்டிட அனுமதி கோரிய மனுவிற்கு அனுப்பிய பதில் வகையில் நான் பெற்ற நகல் பி.வா.சா.ஆ 22

17. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை எண்.17425/2017 பிரகாரம் வாதி தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு சார்பு செய்யப்பட்ட பிரதி பி.வா.சா.ஆ 23

18. தென்காசி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலருக்கு நான் 25.9.17 ம் தேதிய அனுப்பிய மனு கைநகல் பி.வா.சா.ஆ 24

19. தென்காசி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் 9.10.17 ல் அனுப்பிய பதில் அசல் பி.வா.சா.ஆ 25

20. தென்காசி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலருக்கு புல எண். குறித்து நான் 6.1.22 ம் தேதிய அனுப்பிய மனு கை நகல் பி.வா.சா.ஆ 26

21. தென்காசி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் 9.2.2022 ம் தேதியில் வழங்கிய பதில் மற்றும் திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் அசல் பி.வா.சா.ஆ 27

22. தென்காசி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலருக்கு புல எண். குறித்து நான் 18.4.22 ம் தேதிய அனுப்பிய மனு கை நகல் பி.வா.சா.ஆ 28

23. தென்காசி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் எனக்கு 21.6.22 ம் தேதிய வழங்கிய பதில் அசல் பி.வா.சா.ஆ 29

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் தமிழ்நாடு அரசு பொதுபணித்துறையில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்றுள்ளேன். எனது மனைவி மத்திய அரசு பணியில் இருந்து விருப்ப ஒய்வு பெற்றுவிட்டார். நான் பணிபுரியும் போது திருநெல்வேலியில் தான் குடியிருந்தேன். வாதியும், அவரது கணவரும் கல்லூரி பேராசிரியர்கள் என்றால் சரிதான். இருவரும் விருப்ப ஒய்வு பெற்று விட்டார்கள் என்றால் சரிதான். நான்

வடபக்கமும், வாதி தென்பக்கமும் உள்ளோம் என்றால் சரிதான். சொத்துக்கள் ஆதியில் அமிர்தநாயகம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அமிர்தநாயகம், ராதாகிருஷ்ணனுக்கு தகப்பனார் ஆவார். வாதி வள்ளியம்மாளுக்கு மாமனார் என்றால் சரிதான். ஆதியில் வழக்கு சொத்து அமிர்தநாயகம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் 1968ம் ஆண்டு கிரையம் பெற்ற போது இருந்த பரப்பிற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. 1968ம் ஆண்டு ஆவணத்தை வா.சா.ஆ 4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அமிர்தநாயகம் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலை ரத்து செய்து விட்டு கடைசியாக ஒரு உயில் எழுதினார் என்றால் சரிதான். அந்த கடைசி உயில் வா.சா.ஆ 3 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் அடிப்படையில் வடபக்கமுள்ள சொத்து நான் கிரையம் பெற்ற ராமகிருஷ்ணனுக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தென்பக்கம் உள்ள சொத்தை வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு எழுதி கொடுத்த சொத்தை பட்டா மாற்றி அனுபவம் செய்து வருகிறேனா என்றால் பட்டா இல்லை. தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறேன். தென்பக்கம் உயில் மூலம் கிடைத்த சொத்தை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை. உயில் அடிப்படையில் எனக்கு எழுதிகொடுக்கப்பட்ட சொத்தின் கதவு எண் என்னவென்றால் 85 ஆக இருந்து பின்னர் 27 மாறி தற்போது 22 ஆக உள்ளது. கதவு எண்.85 ஒட்டுவீடா என்றால் மட்டப்பா வீடு. எனக்கு 2008ம் ஆண்டு சொத்து எழுதி கொடுக்கப்பட்டது. அந்த ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராதா கிருஷ்ணனுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் வா.சா.ஆ 1 என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு எழுதி கொடுத்த சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 185, 186க்கு 763/4 ஆகும். ஆவணத்தில் புல எண்.763/4 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 763/4 நடப்பில் இருப்பது அப்போது எனக்கு தெரியாது. நான் வாதி பத்திரத்தை வாங்கி பார்த்து படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வாதி பத்திரத்தில் சர்வே எண் 763/49 என சொல்லப்பட்டுள்ளது. அதில் பழைய சர்வே எண். 185, 186 என்றால் சரிதான். எனது ஆவணத்தில் தெற்கு எல்கை என்ன காட்டப்பட்டுள்ளது என்றால் ராதாகிருஷ்ணன் என காட்டப்பட்டுள்ளது.

ராதாகிருஷ்ணன் மனை வீட்டிற்கும் தெற்கு என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மட்டப்பா வீட்டிற்கு முதலில்கொடுக்கப்பட்ட கதவு எண். 85 ஆகும். நான் 2008 ல் கிரையம் வாங்கும் போது கதவு எண். 22 ஆகும். நான் நில மோசடி மனு கொடுத்தேன் என்றால் சரிதான். நான் மாவட்ட பதிவாளரிடம் நில மோசடி புகாரை கொடுத்தேன். மாவட் பதிவாளரிடம் நான் தான் ஆஜரானேன். வாதி தரப்பில் அவரது கணவர் ராதாகிருஷ்ணன் வந்தார். விசாரணை நடந்தது என்றால் சரிதான். விசாரணை முடிவில் என்ன சொல்லப்பட்டது என்றால் உரிமையியல் வழக்கு என்பதால் பதிவு சட்டத்திற்குள் வராது என முடிக்கப்பட்டது. அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காண்பிக்கப்பட்ட உத்தரவானது மாவட்ட பதிவாளர் எனக்கும், வாதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து நான் தான் தென்காசி மாவட்ட பதிவாளரிடம் மனு தாக்கல் செய்தேன். அந்த மனுவும் உரிமையியல் சார்ந்தது என்பதால் நிராகரிக்கப்பட்டது. 6.8.2020 ம் மற்றும் 31.7.2018 தேதியிட்ட உத்தரவுகள் வா.சா.ஆ 8,9 ஆகும். இந்த உத்தரவுகளை எதிர்த்து நான் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் நீதிபேராணை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்பட்ட மனுவானது நான் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் சீராய்வு மனு எண்.541/2024 மனு மற்றும் வாதிக்கு அனுப்பி வைத்த அழைப்பாணை என்றால் சரிதான். அந்த சீராய்வு மனு வா.சா.ஆ 10 ஆகும். அந்த சீராய்வு மனுவில் இதுநாள் வரை உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் 9 முதல் 11 பத்திகளில் ஒப்புக்கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ள விபரங்களுக்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நில மோசடி எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் ஆவண எண்.3671/2016 என்ற ஏற்பாடு ஆவணத்தை வாதிக்கு அவரது கணவர் எழுதி கொடுத்ததால் ஏற்பட்டது. வாதி இடத்தில் இரண்டு வீடுகள் இருந்தது என்றால் 1992 முதல் எந்த வீடும் இல்லை. வாஸ்து பார்த்து இரண்டு வீடுகள் பாழடைந்து விட்ட நிலையில் அதனை தெரிந்து கொண்டே நில மோசடி என பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 2016 ம் ஆண்டில் இருந்து நான் வாதிக்கு இடையூறு செய்து

வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஏற்பாடு ஆவணத்தை படித்து பார்த்தேன். வா.சா.ஆ 1 ஏற்பாடு ஆவணம் போலியானது என வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எப்போதும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது இல்லை என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற வீடானது வடக்குபக்கம் பார்த்த வாசலா என்றால் வடக்கு பக்கம் முன்வாசலும், தெற்கு பக்கம் பின்வாசலும் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் வடக்கு பக்கம் மட்டுமே முன்வாசல் உள்ளது என்றால் சரியல்ல. நான் இடித்து வீடு கட்ட பிளான் வாங்கினேனா என்றால் முதல் தளம் கட்டுவதற்காக வாங்கினேன். அவ்வாறு அனுமதி வாங்கிய பிளானை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அனுமதியின் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அதை பார்த்தால் பழைய வீடு எவ்வாறு இருந்தது என தெரியும் என்றால் சரிதான். பழைய வீட்டை புதுபித்தது பற்றி புதிய அனுமதியில் தெரியும் என்றால் முன்பக்கம் மட்டும் இடித்து கட்டியுள்ளேன். அந்த பிளானுக்கு நான்கு மால்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிளானில் நான்கு மால்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் அதில் சன்சைடு, கேமரா பொருத்தியது இல்லை என்றால் சரியல்ல. பிளானில் சன்சைடு, கேமரா இருந்தது துலங்குமா என்றால் சரியல்ல. துலங்காது. சன்சைடு, கேமரா எப்போது வைத்தேன் என்றால் 2018 ல் வைத்தேன். இரும்பு கேட் போட்டிருப்பது பழைய பிளானில் இல்லை என்றால் சரியல்ல. இரும்பு கேட் 2018 ம் ஆண்டு அமைக்கப்பட்டது. தொடர் தொல்லைகளால் வாதி கிழமேல் சுவர் வைக்க வேண்டியது ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த கிழமேல் சுவர் தற்போது வரை பூசப்படாமல் உள்ளது என்றால் சரிதான். அது அனுமதியில்லாமல் கட்டப்பட்ட சுவராகும். கிழமேல் சுவர் 2016 ம் ஆண்டு கட்டப்பட்டதாகும். ஏற்பாடு ஆவணத்தை போலி ஆவணம் என பெயரளவிற்கு சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அந்த ஏற்பாடு ஆவணம் வாதிக்கு அவரது கணவர் முறையாக எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட வரும் போது நான் இருந்தேன். ஆட்சேபனை மனு கொடுத்ததை மீறி நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தார். அப்போது சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்தார் என்றால் சரிதான். நீதிமன்ற

ஆணையர் சர்வேயர் உதவியுடன் சர்வே கற்களை கண்டறிந்து அளவீடு செய்தார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் சர்வே வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரத்து செய்யப்பட்ட புல எண் வரைபடத்தையும் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏற்பாடு ஆவணத்தை ரத்து செய்ய கோரி இதுநாள் வரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொடர்புடைய ரீட் மனு தாக்கல் செய்துள்ளேன். நான் உயர்நீதிமன்றத்தில் எதற்காக ரீட் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீடே இல்லாத இடத்தில் வீடு உள்ளதாக கூறி ஆவணம் பதிவு செய்துள்ளதால் சார்பதிவாளருக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்ய வேண்டும் என மனு தாக்கல் செய்தேன். 2016 ம் ஆண்டு நான் தொல்லை கொடுத்தால் தான் வாதி கிழமேல்சுவர் கட்டி அவருடைய இடத்தை பாதுகாக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்ய வேண்டி ஏற்பட்டது என்றால் சரியல்ல. கிழமேல் சுவரை அப்புறப்படுத்த நான் முயற்சி எடுத்தேனா என்றால் எடுத்தேன். பேரூராட்சி நிர்வாகத்திற்கு புகார் மனு அனுப்பினேன். அந்த புகார் மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 12.10.2016 ம் தேதி புகார் கொடுத்தேன். அவ்வாறு எழுத்துபூர்வமாக வழக்கு முடிந்த பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொடுத்தார்களா என்றால் இல்லை. கிழமேல் சுவர் சம்பந்தமாக நான் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றும் அதன் மேல் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. கிழமேல் சுவருக்கு வடபக்கம் மேல்பக்கம் 3 அடியும், கீழ்பக்கம் 2 அடியும் ஆக்கிரமித்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் அத்துமீறி அமைத்துள்ள இரும்பு கேட், கேமரா, சன்சைடு இவற்றை அகற்ற கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் கிழமேல் சுவருக்கு வடபக்கம் எவ்வளவு உள்ளது என சொல்லியுள்ளார் என்றால் அந்த ஆணையர் அறிக்கையை நான் நிராகரிக்கிறேன். கிழமேல் சுவருக்கு வடபக்கம், மேல்பக்கம் 2 அடியும், கீழ்பக்கம் 1–3/4 அடி அளவுகள் உள்ளதாக ஆணையர் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு எதிராக எந்த ஒரு உத்தரவும் இதுநாள் வரை பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஆட்சேபனை இந்நீதிமன்றத்தில் உரிய

காலத்திற்குள் தாக்கல் செய்யாததால் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போது நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எதிராக சீராய்வு மனு நிலுவையில் உள்ளது. வாதி வீடு கட்டுவதற்கு அனுமதி தர வேண்டும் என உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தற்போது அந்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். காவல்துறை கண்காணிப்பாளரிடம் என்ன மனு கொடுத்தேன் என்றால் உரிய அனுமதியில்லாமல் வீடு கட்ட முயற்சித்ததாகவும், தற்போது மரத்தை வெட்டி விற்றுவிட்டதாகவும் புகார் கொடுத்தேன். எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 13.2.2026 ல் கொடுத்தேன். அந்த புகார் மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் போது நான் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்வதே வாடிக்கை என்றால் சரியல்ல. 2ம்லக்க சொத்து எது என தெரியுமா என்றால் 2ம்லக்க சொத்திற்கு தனியாக பத்திரம் இல்லை. 1ம் லக்க சொத்தின் ஒரு பகுதி 2ம்லக்க சொத்து என்றால் சரிதான். 3ம்லக்க சொத்தாக எனது சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த 3 சொத்துக்களை காண்பித்து வழக்குரையிலும், நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும் அளவுகள், சுவர்களின் உயரம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழு பொ)
தென்காசி.